**ஐயம் :** ஜோதிடர்கள் கூறும் சில செய்திகள் நடக்கின்றன. பல செய்திகள் நடப்பதில்லை. நடக்கக்கூடிய செய்திகளைத் தெரிந்து கொள்வதற்காகவாவது ஜோதிடரை அணுகலாம் அல்லவா? ஆனால் 'உங்கள் இஸ்லாம்' அதைத்தடுப்பது ஏன்? ***S.*** *தாமோதரன், மதுரை*

**தெளிவு :** எதிர்காலத்தில் நடைபெறவிருக்கின்ற விஷயங்களில் ஜோதிடன் கூறுவதில் உண்மையும் இருக்கிறது, பொய்யும் இருக்கிறது. உண்மையைத் தெரிந்து கொள்வதற்காகவாவது ஜோதிடம் பார்க்கலாம் என்பதே தங்களின் வாதம்.

எதிர்காலத்தில் நடைபெறவிருப்பதாக ஜோதிடர் கூறும் விஷயங்களில், உண்மை எது என்பதை, விஷயம் நடைபெறுவதற்கு முன்பாகவே உங்களால் எப்படி அறிந்து கொள்ள முடியும்? தங்களால் அறிந்து கொள்ள முடியும் என்று ஒரு வாதத்திற்காக எடுத்துக்கொள்வோம். அதன்பின் என்ன நடக்கும் தெரியுமா?

நடைபெறவிருக்கின்ற விஷயம் துக்ககரமானதாக, வேதனைத் தரக்கூடியதாக, அமங்களமானதாக இருந்தால், உங்கள் நிலை என்னவாகும் என்பதை யோசியுங்கள். அந்த விஷயம் நடந்த பின் துக்கம் அடையக்கூடிய தாங்கள், நடப்பதற்கு முன்பாகவே அதாவது ஜோதிடனிடமிருந்து தெரிந்து கொண்ட உடனேயே துக்கப்பட ஆரம்பித்து விடுவீர்கள்; வேதனைப்படுவீர்கள்; சரியாக சாப்பிட மாட்டீர்கள்; பணிகளில் கவனம் செல்லாது; உறக்கத்தைத் தொலைத்து விடுவீர்கள்; குடும்பத்தாரிடம் எரிந்து விழுவீர்கள்; வேலைகளைச் சரிவரச் செய்யாததால் கெட்ட பெயர் ஏற்படும்; மன உளைச்சலுக்கு உள்ளாகி விடுவீர்கள். இறுதியில் மனநோயாளியாகவும் தாங்கள் ஆகிவிடக்கூடும். உங்கள் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கும் இத்தனைச் செயல்களையும் தவிர்த்துக் கொள்வதற் காகவோ அல்லது எப்படிப்பட்ட துக்கமானாலும் தாங்கிக் கொள்ளக் கூடியவராக தாங்கள் இருந்தாலோ, நீங்கள் அடுத்து என்ன செய்ய முயல்வீர்கள் தெரியுமா? நடைபெறவிருக்கின்ற அந்த விஷயத்தை அதாவது துக்கமான நிகழ்ச்சியை நடைபெறாமல் செய்து விட முட்டாள்த்தனமாக முயற்சிப்பீர்கள். அந்நிகழ்ச்சியை தங்களால் தடுத்து நிறுத்திவிட முடியுமா? அதுவும் முடியாது! ஏனென்றால் அது இறைவன் விதித்ததல்லவா?

மொத்தத்தில் தாங்கள் கையாலாகாமல் நடைபிணமாகி விடுவீர்கள்! பயப்படாதீர்கள்! ஜோதிடனை அணுகினால் அவன் கூறும் நிகழ்ச்சி நடைபெறுகிறதோ இல்லையோ, மேற்கூறியவைகள் நடைபெற ஆரம்பித்து விடும்.

எனவே ஜோதிடம் பார்ப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்! ஜோதிடன் கூறுவதில் சில உண்மைகள் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளீர்கள். பத்து விஷயங்கள் சொன்னால், அதிர்ஷ்டவசமாக இரண்டு விஷயங்கள் கூடவா நடக்காமல் போகும் என்ற எதிர்பார்ப்புடன் ஜோதிடன் கூறுவான் என தர்க்க ரீதியாக பதில் தந்து விட முடியும். ஆனால் எதிர்காலத்தில் நடைபெற இருப்பதில், நடக்கவிருக்கும் ஒன்றிரண்டை ஜோதிடன் எப்படிச் சொல்கிறான் என்பதையும் இஸ்லாம் தெள்ளத் தெளிவாகக் கூறுவதைப் பாருங்கள்.

> **"இறைவன் வானுலகில் ஏதேனும் ஒரு விஷயம் பற்றி முடிவெடுத்தவுடன், வழுக்குப் பாறையில் விழுந்த இரும்பு வளையல் போல, வானவர்கள் தங்கள் சிறகுகளை பணிவுடன்**

**அடிப்பார்கள். அவர்களின் திடுக்கம் நீங்கிய பின் (தங்களுக்குள்) உங்கள் இறைவன் கூறியது என்ன என்று கேட்டுக்கொண்டு 'உண்மையே கூறினான்' எனப் பதிலும் கூறிக் கொள்வார்கள். (ஷைத்தான்கள்) சிலருக்கு மேல் சிலராக அதனை (ஒட்டுக்) கேட்க முயற்சிப்பார்கள். அவற்றில் ஓரிரு வார்த்தையை செவியுறவும் செய்வார்கள். அதைத் தங்களுக்குக் கீழே உள்ளவர்களுக்கு அனுப்புவார்கள். சில சமயங்களில் கீழுள்ளவர்களுக்கு அவர்கள் தகவல் அனுப்புவதற்கு முன், தீப்பந்தமும் அவர்களைத் தாக்கும். தாங்கள் ஒட்டுக் கேட்ட செய்தியுடன் 100 பொய்களைக் கலந்து, சூனியக்காரர்கள், ஜோதிடர்களிடம் சமர்ப்பிப்பார்கள். அவற்றில் வானிலிருந்து செவியுற்ற ஒரு வார்த்தை மட்டும் மெய்யாக நடந்தேறும்"** என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி),*

*நூல்கள் : புகாரீ, முஸ்லிம் சுனன் இப்னு மாஜா*

**'உங்கள் இஸ்லாம்'** என்று தங்கள் ஐயத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள். குறிப்பிட்ட சாராரின் பூர்வீக சொத்தல்ல இஸ்லாம். உலகங்களின் ஒரே இறைவன் இறக்கி அருள் புரிந்துள்ள வழிகாட்டலான புனித குர்ஆன் முஸ்லிம்களுக்கான வேதம் என்று, முஸ்லிம்களிலுள்ள ஒரு சில அறிவிலிகள் கூறிக்கொண்டிருப்பதன் விளைவாகத்தான் தாங்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளீர்கள். உலகங்களுக்கெல்லாம் ஒரே இறைவன் தெரிவிப்பதைப் பாருங்கள் :

**"(இந்த குர்ஆன்) உலக மக்கள் யாவருக்கும் நல்லுபதேசமேயன்றி வேறில்லை".**

*அல்குர்ஆன் 6:90*

**'இஸ்லாம்'** என்ற அரபி மொழி வார்த்தைக்கு **'(ஒரே இறைவனுக்கு) அடிபணிதல், கீழ்ப்படிதல்'** போன்ற பொருளும், **'சமாதானம்'** என்ற பொருளும் உண்டு. எனவே, ஒரே இறைவனுக்கு மட்டும் தன்னை முழுமையாக அடிபணியச் செய்து இணங்கி நடப்பவன் சமாதானத்தை அடைவான் என்பதே இஸ்லாம் என்பதன் பொருள். அப்படி வாழ்பவர் **'முஸ்லிம்'** ஆவார். எனவே இஸ்லாத்திற்குத் தேவை அதைப் பின்பற்றுபவர்கள் மட்டுமே.

அனைத்தையும் படைத்தவன் நிச்சயமாக ஒரே ஒரு இறைவனாகத்தான் இருக்கமுடியும். அவன் வழிகாட்டிய மார்க்கம் எது என்பதை அறிய வேண்டியது ஒவ்வொரு வரின் கடமையாகும். அதை அறிய முயற்சித்திருப்பீர் களேயானால், 'உங்கள் இஸ்லாம்' என்று கூறியிருக்க மாட்டீர்கள்.

*ஐயம் :* கெட்டவர்கள் செய்து கொண்டிருக்கும் சதக்காவை அல்லாஹ் ஏற்பதில்லை என்று கூறுவது உண்மையா?

***K.S.*** *அர்ஷத் அலி, ரியாத், சவூதி அரபியா*

*தெளிவு :* கெட்டவர்கள் என்று தாங்கள் குறிப்பிடுவது எந்தச் செயல்களின் அடிப்படையில் என்று

எமக்குத் தெரியவில்லை. இக்கருத்தில் அமைந்த ஹதீஸ் ஒன்றைத் தருகிறோம். பார்வையிடுங்கள் :

**“மோசடிக்காரனிடமிருந்து தர்மத்தையும், ஒழுவின்றி தொழுபவனின் தொழுகையையும் அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான்”** என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : உஸாமா இப்னு உமைக்(ரழி), நூல் : முஸ்லிம், அஹமது, அபூதாவூத், திர்மிதீ, நஸயீ, தப்ரானி, இப்னு மாஜா*

ஜனவரி 2005 அந்நஜாத்